# 18 முறை தரிசனையான லூர்து மாதா!

1858 பிப்ரவரி 11-ம் நாள் துவங்கி ஜுலை 16-ம் நாள் வரை தேவதாய் அர்ச். பெர்னதெத்திற்கு 18 தடவைகள் காட்சியளித்தார்கள்.

**முதலாம் காட்சியில்** : (பிப்ரவரி 11-ம் நாள் வியாழன்)

திரிகால ஜெபம் சொல்லும் நேரம். மசபியேல் மலை முகடுகளில் விறகுகளை சேகரிக்கச் சென்ற சிறுமி பெர்னதெத் மலைக் கெபியில் தேவதாயைக் கண்டாள். அதனை : “நான் வெள்ளை நிற ஆடை அணிந்த ஒரு அழகிய கன்னிகையைக் கண்டேன். அவர்கள் வெண்ணிற மேலாடையும், அதே நிறத்தில் முக்காடிட்டு நீல நிற இடைக்கச்சையுடன் காணப்பட்டார்கள். அவர்களது பாதங்களில் இரு மஞ்சள் நிற ரோஜாப் பூக்கள் இருந்தன”  என்று விவரித்தாள்.

**2-ம் காட்சி:** (பிப்ரவரி 14-ம் நாள் ஞாயிறு)

இப்போது 10 பேர் பெர்னதெத்துடன் இருக்கிறார்கள். பெர்னதெத்தம்மாள் மந்திரித்த தீர்த்தத்தை காட்சியின் மீது தெளிக்கிறாள். அந்த அழகிய மாதரசி புன்னகை புரிந்து தலையசைக்கிறார்கள்.

**3-ம் காட்சி :** (பிப்ரவரி 18-ம் நாள் வியாழன்)

அழகி மாதரசி பேசுகிறார்கள். பெர்னதெத்தம்மாள் அவளது பெயரை எழுதி தரும்படி கேட்க, “நான் உனக்கு சொல்ல இருப்பதை எழுதி வைக்க அவசியமில்லை”  என்று பதிலளித்தார்கள்.

**4-ம் காட்சி:** (பிப்ரவரி 19-ம் நாள் வெள்ளி)

சிறுமி குகையருகே மந்திரிக்கப்பட்ட மெழுகுதிரியுடன் சென்றாள் - மௌனமான சிறு காட்சி.

இந்த காட்சியில் இருந்துதான், மெழுகுதிரிகளை கொண்டு வந்து கெபியின் முன்பாக ஏற்றி வைக்கும் பழக்கம் தொடங்கியது.

**5-ம் காட்சி:** (பிப்ரவரி 20-ம் நாள் சனி)

அவ்வழகிய மாதரசி பெர்னதெத்தம்மாளுக்கு மட்டும் ஒரு ஜெபத்தை கற்றுக் கொடுக்கிறார்கள். இதை தனது வாழ்நாள் முழுவதும் சொல்லி வரவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

**6-ம் காட்சி:** (பிப்ரவரி 21-ம் நாள் ஞாயிறு)

பெரும் திரளான கூட்டத்திற்கு முன்பாக காட்சிää - மாதரசி: "பாவிகளுக்காக ஜெபம் செய்" என்றார்கள்.

**7-ம் காட்சி:** (பிப்ரவரி 23-ம் நாள் செவ்வாய்)

பெர்னதெத்திற்கு மட்டும் இரகசியம் கூறப்படுகிறது.

**8-ம் காட்சி:** (பிப்ரவரி 24-ம் நாள் புதன்;)

காட்சியளிக்கும் மாது : **"ஜெபம், தவம், தவம்! பாவிகளுக்காக மன்றாடு** " என்று கூறி, சிறுமியை பாவிகளுக்காக தபசாக தரையை முத்தி செய்யச் சொன்னார்கள்.

**9-ம் காட்சி:** (பிப்ரவரி 25-ம் நாள் வியாழன்)

அற்புத நீரூற்று காணப்படுகிறது. காட்சியளிக்கும் மாது, சிறுமியை நீரூற்றில் பருகவும், அதிலிருந்து முகத்தைக் கழுவி, அங்குள்ள புல்லை சாப்பிடவும் பணிக்கிறார்கள்.

**10-ம் காட்சி:** (பிப்ரவரி 27-ம் நாள் சனி)

மௌனமாக இருக்க சிறுமி நீரூற்றிலிருந்து நீர் பருகி, தரையை முத்தமிட்டு பாவங்களுக்கு தபசு செய்கிறாள்.

**11-ம் காட்சி:** (பிப்ரவரி 28-ம் நாள் ஞாயிறு)

தபசு - பெர்னதெத் முதல் நாள் செய்ததை போல் தவ முயற்சியைச் செய்ய, கூட்டத்தினர் அவளைக்; கண்டுபாவிக்கிறார்கள்.

**12-ம் காட்சி:** (மார்ச் 1-ம் நாள் திங்கள்)

முதல் புதுமை நடக்கிறது. கத்தரீன் லதாபி என்ற பெண் செயல் இழந்த கையை நீரூற்றின் நீரில் நனைக்க சுகமடைகிறாள்.

**13-ம் காட்சி:** (மார்ச் 2-ம் நாள் செவ்வாய்)

குருக்களுக்குச் செய்தி - "குருக்களிடம் சென்று இங்கு சுற்றுப்பவனியாக வரவேண்டும். ஒரு சிற்றாலயம் கட்ட வேண்டும் என்று சொல்!"

**14-ம் காட்சி:** (மார்ச் 3-ம் நாள் புதன்)

கெபிக்கருகே 3000 மக்கள் கூடியிருக்க பெர்னதெத் மீண்டும் ஒரு முறை அம்மாதரசியின் பெயரைக் கேட்கிறாள். ஆனால் புன்முறுவலே பதிலாக வருகிறது.

**15-ம் காட்சி:** (மார்ச் 4-ம் நாள் வியாழன்)

அதிக எதிர்ப்பார்ப்புடன் காத்திருந்த நாள். 8000 மக்கள் கூடியுள்ளார்கள். காட்சியளிக்கும் போது மாதா மௌனமாயிருந்தார்கள்.

**16-ம் காட்சி:** (மார்ச் 25-ம் நாள் வியாழன்)

பெயர் கூறல் - சிறுமி மீண்டும், மீண்டும் விடாமல் அவர்களது பெயரைக் கேட்க, அம்மாதரசி தமது கண்களை வான்நோக்கி உயர்த்தி, பூமியை நோக்கி கரங்களை விரித்து, பின்னர் ஜெபிக்கும் பாவனையாக "**நாமே அமலோற்பவம்**" என்று கூறினார்கள்.

**17-ம் காட்சி:** (ஏப்ரல் 7-ம் நாள் புதன்)

எரியும் திரி புதுமை! காட்சியின் போது கையில் எரியும் மெழுகுதிரியை ஏந்திய பெர்னதெத், பரவசமடைந்த போது திரியின் சுடர் அவளது கைகளில் வெகு நேரம் பட்டும், சுட்டெரிக்காமல் - காயமின்றி இருந்தது.

**18-ம் காட்சி:** (ஜூலை 16-ம் நாள் வியாழன்)

கார்மெல் மாதா திருநாள் - இதுவே கடைசி காட்சி.

லூர்து பதி காட்சிகளின் 150-வது ஆண்டு நிறைவான இவ்வாண்டில் தேவதாய் கேட்டுக்கொண்டபடி பாவிகள் மனந்திரும்பவும் நமது பாவங்களுக்குப் பரிகாரமாகவும் தவம் செய்வோமாக!